


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 50,202 பயனாளிகளுக்கு ரூ.170.31 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வசிப்பவர்களிடம், வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் ஆகியோர் உள்ளனர்.



சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில், நேற்று முன்தினம் (11.06.2023) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யம் பெருமாள்பட்டியைச் சேர்ந்த திருமதி கண்ணம்மாள் என்பவரின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

கோனூர் ஊராட்சியில் உள்ள

# தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சேலம், ஜூன்.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வகிக்கும் மக்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் இன்று மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10.6.2023 அன்று மாலை சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் காலை (11.6.2023) சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1998 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அச்சமத்துவபுரத்தை சீரமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் 2021 2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.47 இலட்சம் செலவில் 94 வீடுகளுக்கு வெள்ளை அடித்தல் மற்றும் சிறு பழுது நீக்கப் பணிகளும், ரூ.44.20 இலட்சம் செலவில் சாலை வசதி, குடிநீர் வசதி, விளையாட்டு மைதானம், சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம், நியாய விலைக்கடை, சமத்துவபுர வளைவு ஆகிய இதர பொது கட்டமைப்புகளுக்கான பழுது நீக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் சமத்துவபுரத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களிடம் அங்குள்ள சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, அம்மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக உள்ளதாகவும், சமத்துவபுரத்தை சீரமைத்திட நடவடிக்கை எடுத்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அரிக்கொம்பன் யானை பற்றிய தற்போதைய நிலை!

## தலைமை வனப் பாதுகாவலர் அறிக்கை!

*சென்னை, ஜூன் 13-*

*அரிக்கொம்பன் பற்றிய தற்போதைய நிலை குறித்து தலைமை வனப்பாதுகாவலர் செய்தி வெளியிட்டுள்ளார்.*

*இதுகுறித்து தலைமை வனப்பாதுகாவலர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-*

*தேனி மாவட்டத்தில் கடந்த வாரம் பிடிக்கப்பட்ட அரிக்கொம்பன் யானை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பத்திற்கு உட்பட்ட மேல் கோதையாறில் உள்ள குட்டியார் அணைப்பகுதியில் விடப்பட்டது. அரிக்கொம்பன் யானையானது தற்பொழுது நல்ல உடல்நலத்துடன் சீரான உணவு மற்றும் நீர் எடுத்துக் கொள்கிறது. யானையின் நடமாட்டத்தினை களக்காடு, அம்பாசமுத்திரம் மற்றும் கன்னியாகுமரி வனக்கோட்ட பணியாளர்கள் இரவு பகலாக கண்காணித்து வருகின்றனர்.*

*ஜூன் 6 ஆம் தேதி முதல் வன உயர் அதிகாரிகள், கால்நடை மருத்துவக் குழு, முன்களப் பணியாளர்கள் உள்ளடக்கிய மொத்தம் 6 குழுக்கள் அரிக்கொம்பன் கழுத்தில் பொறுத்தப்பட்டுள்ள ரேடியோ காலர் தொழில் நுட்பம் மூலம் யானையின் நடமாட்டம் துல்லியமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

*வனத்துறை சார்பாக யானைக்கும், பொதுமக்களுக்கும் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து எடுக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



**தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.**

**தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

லால்குடியில் இருந்து ஆலங்குடி

# மகாஜனம் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து இயக்கம்!

## முதல்வரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே நடவடிக்கை! பொதுமக்கள் மகிழ்ச்சி!

திருச்சி, ஜூன் 13-

முதல் அமைச்சரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே லால்குடியில் இருந்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்திற்கு கூடுதல் பஸ் இயக்கப்பட்டதால் கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர் என 'தினத்தந்தி' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சி மற்றும் தஞ்சை மாவட்ட காவிரி டெல்டா பகுதிகளில் நடந்து வரும் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிலையில் அவர் திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள ஆலங்குடி மகாஜனம் செங்கரையூர் கூழையாற்றில் நடைபெறும் தூர்வாரும் பணியை ஆய்வு செய்ய செல்லும் வழியில் ஆலங்குடி மகாஜனம் கிராமத்தில் காரை நிறுத்தி அங்கிருந்த மக்களிடம் கலந்துரையாடினார்.

அப்போது, கிராம மக்கள் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தனர். லால்குடியில் இருந்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்திற்கு போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக உள்ளது. இதனால் பள்ளி மாணவிகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு செல்ல முடியாமல் மாணவ-மாணவிகள் அவதி அடைந்து வருகின்றனர். எனவே கூடுதல் பஸ் வசதி வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த பஸ் லால்குடியில் இருந்து தினமும் காலை 6 மணி, 8 மணி, 11.35 மணி, மதியம் 1.50 மணி, மாலை 4.20 மணி, 5. 30 மணி, இரவு 7.50 ஆகிய நேரங்களில் மகாஜனம் கிராமத்திற்கு இயக்கப்படுகிறது. முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே பஸ் இயக்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

இது குறித்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்தை சேர்ந்த பிரேமா கூறும்போது, பல ஆண்டுகளாக எங்கள் கிராமத்திற்கு பஸ் வசதி இல்லை. எங்கள் கிராமம் வழியாக வருகை தந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தோம். கோரிக்கை வைத்த மறுநாளே பஸ் இயக்கப்பட்டது. இதற்கு முதல் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம், என்றார். மகாராணி என்ற பெண் கூறும்போது, முதல் அமைச்சரிடம் கோரிக்கை வைத்த உடன் பஸ்கள் இயக்கப்பட்டதால் மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் பள்ளி குழந்தைகள், வேலைக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கோரிக்கை வைத்த உடனே பஸ் இயக்கிய முதல்அமைச்சருக்கு கிராம மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம், என்றார்.

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில்

# அரசுப்பள்ளியை சீரமைத்த சிங்கப்பூர் சகோதரர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வாழ்த்து!

சேலம், ஜூன் 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில், கஜா புயலினால் சேதமடைந்த 60 ஆண்டுகால அரசுப் பள்ளியை, அந்தக் கிராமத்தில் வசித்த தாய் தனசேகரி அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, சிங்கப்பூர் வாழ் சகோதரர்களான இளங்கோவன், முத்தழகன், இராஜகோபால் ஆகியோர் நம்ம_பள்ளி திட்டத்தின்படி செப்பனிட்ட செய்தியறிந்து முதலமைச்சராக மட்டுமல்ல, திருவாரூர்க்காரனாகவும் உள்ளம் நெகிழ்ந்து போனேன்.**

**பள்ளியைச் செப்பனிட்டதோடு, 'தனசேகரி அம்மாள் அறிவரங்கம்' என மறைந்த தங்களது தாயின் பெயரை அரசின் அனுமதியோடு அப்பள்ளிக் கட்டடத்திற்குச் சூட்டிய அந்தச் சகோதரர்கள், அந்த ஊரின் பெயர் போல் பெருகவாழ்வார்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்!





அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் எம்.பி. ஆர்.எஸ்.பாரதி, மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் உரையாற்றினார்கள். உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைக் கழக வழக்கறிஞர் வெ.கொ.சூரியா, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.